## இலக்கியமும் சமூகவியலும் இணைந்த கல்விக்கான (Combined Humanities) பாடத்திட்டம் உயர்நிலை 3 & 4 (விரைவு/சிறப்பு) வகுப்புகளுக்குரியது

*(இப்பாடத்தை வழக்கநிலை மாணவர்களும் பொதுக்கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைப் பாடமாக எடுத்துப் பயிலலாம்.)*

உயர்நிலைப் பள்ளிகளில் மேனிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்குச் சமூகவியலில் ஏதேனுமொரு பாடத்துடன் தமிழிலக்கியத்தை இணைத்து ஒரு பாடம் வழங்கப்படுகிறது. இப்பாடம் பொதுக்கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தேர்வுக்குரிய பாடங்களில் ஒன்றாகவும் அமைகிறது. இப்பாடம் நவீன தமிழ் இலக்கியத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அத்தகைய இலக்கியக் கல்விக்கான பாடத்திட்டம் குறித்து நோக்கங்கள், குறிக்கோள்கள், நெறிமுறைகள், திறன் வளர்ச்சி, கற்றல்/கற்பித்தல் கூறுகள் முதலான தலைப்புகளில் இங்கே விளக்கப்படுகிறது.

**நோக்கங்கள்:**

**இலக்கியக் கல்விக்கான நோக்கங்கள் பின்வருமாறு:**

1. தமிழிலக்கியத்தை மாணவர்க்கு முறையே அறிமுகப்படுத்துதல்
2. தமிழ் இலக்கிய வகைகளான சிறுகதை, புதுக்கவிதை, முதலானவற்றைப் படித்து, கேட்டு, மகிழ்வதோடு அவற்றைப் பற்றிய தங்களின் புரிந்துணர்வைத் தெளிவாகவும் தொடர்புபடவும் வெளிப்படுத்த உதவுதல்
3. வாழ்க்கையோடு தொடர்புடையவற்றைப்பற்றி ஆராய்ந்து, தங்களைப் பண்படுத்திக்கொள்ள வழிகாட்டுதல்
4. முருகுணர் (Aesthetic) வளர்ச்சிக்கும் கற்பனைத்திறன் வளர்ச்சிக்கும் இலக்கியத்தின் பங்களிப்பைப் புரிய வைத்தல்
5. மரபுவழிப் பண்புகளை அறிவுறுத்தவும் மொழியறிவை வளப்படுத்திக்கொள்ளவும் ஏற்புடைய சூழலை உருவாக்கித் தருதல்

**குறிக்கோள்:**

உயர்நிலைப் பள்ளியில் தமிழ் மொழிப்பாடத்தில் ஓரளவு மீத்திறன்மிக்க மாணவர்களுக்கு இப்பாடம் அறிமுகப் படுத்தப்படலாம். இப்பாடத்தை ஈராண்டுகளில் படித்து முடிக்கும் மாணவர்கள் அடைந்திருக்க வேண்டிய இலக்குகளின் அடிப்படையில் இலக்கியம் சார்ந்த குறிக்கோள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. மரபுக்கவிதை, புதுக்கவிதை, நாவல், சிறுகதை ஆகிய இலக்கியப் படைப்புகள் பற்றிப் பொதுவான அறிமுகம் பெற்றிருத்தல்
2. இலக்கியப் படைப்புகளின் இடையேயுள்ள வடிவ வேறுபாட்டினை அறிந்திருத்தல்
3. தற்காலத் தமிழ் இலக்கியத்தைப்பற்றிய அடிப்படைச் செய்திகளை அறிந்திருத்தல்
4. வெவ்வேறு இலக்கியப் பனுவல்கள் வாயிலாக அறியக்கூடிய விழுமங்களை (values) அடையாளம் காண இயலுதல்
5. ஒவ்வொரு இலக்கியப் பனுவலிலும் கதைக் கரு (theme), கதைத் திட்டம் (plot),வடிவம் (form), நடை (style), கதைப்பின்னணி (setting) முதலானவை அமைந்துள்ள பாங்கினைப் புரிந்துகொள்ளுதல்
6. கவிதையில் கற்பனை, கருத்து, உணர்ச்சி, வடிவம் முதலியவை அமைந்துள்ள பாங்கினைப் புரிந்துகொள்ளுதல்

## நெறிமுறைகள்

இலக்கியத்தை ஒரு பாடமாகக் கற்பிக்க முற்படும்போது சில நெறிமுறைகளைப் பின்பற்றுதல் அவசியமாகும்.

### *1 இலக்கியப் பாடத்தைக் கற்பிக்கச் சில நெறிமுறைகள்:*

* கவிதை வடிவிலும், உரைநடை வடிவிலும் அமையப்பெற்ற பலவகையான இலக்கியப் படைப்புகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல்

* பனுவல்கள் தொடர்பாகத் தங்கள் உணர்வுகளை, கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் வெளியிட மாணவர்களுக்கு ஏற்றதொரு சூழலை அமைத்துத் தருதல்

### *2 இலக்கியத் திறன் வளர்ச்சி*

இலக்கியப் பாடத்தை முதன்முதலாகப் பயிலும் மாணவர்களுக்குப் பின்வரும் திறன்களில் பயிற்சியளித்தல் வேண்டும்.

* பல்வேறு இலக்கிய வடிவங்கள் (forms), உள்ளடக்கம் (content) ஆகியவற்றை அடையாளங்காணுதல்

* ஓர் இலக்கியப் படைப்பிலுள்ள அடிப்படைக் கூறுகளான கரு, கற்பனை, உணர்ச்சி, உவமை, உருவகம் முதலானவற்றை வேறுபடுத்திக் காண அறிதல்

* இலக்கியப் பனுவல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் திறனாய்வின் அடிப்படையில் நுணுகி ஆராய்ந்து புரிந்துணர்வை வளர்த்துக்கொள்ளல்

* குறுநாவல்கள், சிறுகதைகள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும் அறிதல்

### *கற்றல் / கற்பித்தல் கூறுகள்*

ஓர் இலக்கியம் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியிருக்கும். இக்கூறுகள் ஒவ்வொன்றின் பயன்பாட்டையும் மாணவர்கள் நன்குணரும் வகையில் கற்பிக்க வேண்டும். ஓர் இலக்கியத்தை முழுமையாகவும் பொருளுணர்ந்தும் படித்து மகிழ்வதற்கு இது உறுதுணையாய் அமையும். ஒவ்வோர் இலக்கியத்திலும் எல்லாக் கூறுகளும் அடங்கியிருக்கும் என்று கொள்ள முடியாது. இலக்கியப் பாடத்தைக் கற்பிக்கும்போது பயின்றுவரும் இலக்கியக் கூறுகளைத் தனிப்படுத்திக் கற்பிக்கக் கூடாது. மாறாக, இலக்கியச் சுவை குன்றாமல் அந்தந்த இடங்களில் குறிப்பிடத்தக்க சில கூறுகளை ஆங்காங்கே கோடிட்டுக் காட்டித் தொடர்புபடுத்திக் கற்பிக்க வேண்டும்.

### *இலக்கியக் கூறுகள்*

அடிப்படை இலக்கியக் கூறுகளெனச் சிலவற்றைக் குறிப்பிடலாம். பொதுவாக, ஓர் இலக்கியத்தைப் படிக்கவும், பொருளுணர்ந்து கொள்ளவும், பின்வரும் அடிப்படைக் கூறுகள் பற்றிய விளக்கம் பயன்மிக்கதாக அமையும்.

### *கதைத் திட்டமும் வடிவமைப்பும்*

* இலக்கியப் பனுவலில் உள்ள நிகழ்ச்சிகளில் காணப்படும் படிநிலை வளர்ச்சி

* பனுவலில் குறிப்பிடப்படும் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் ஒட்டுமொத்த கதைத் திட்டத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள்

* சொல்லப்படும் செய்திக்கும் அதற்குக் கையாளப்பட்டுள்ள இலக்கிய வடிவத்துக்கும் உள்ள தொடர்புநிலை

* வழக்கமாகக் கையாளப்படும் முறையிலிருந்து வேறுபட்டு (கருத்து நிலையிலோ காட்சி நிலையிலோ) எழுத்தாளர் தம் படைப்பை அமைப்பதால் உண்டாகும் விளைவுகள்

*அமைப்பும் சூழலும்*

* இலக்கியப் பனுவலின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையும் முக்கியக் கூறுகள் (எ-டு: நிலவியல், வரலாறு, சமூகம், பண்பாடு)

* பனுவலின் அமைப்பிலும் சூழலிலும் ஏற்படும் மாற்றங்களின் முக்கியத்துவம்

* குறிப்பிட்ட மனநிலையை அல்லது சூழலை ஏற்படுத்துவதற்கு எழுத்தாளர் கையாளும் உத்திகள்

*பாத்திரப் படைப்பு*

* பனுவலில் இடம்பெற்றுள்ள வெவ்வேறு பாத்திரங்களின் பண்புநலன்கள்

* வெவ்வேறு பாத்திரங்களின் பண்புநலன்களில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள்

* பனுவலில் வரும் பாத்திரங்களுக்கிடையிலான உறவுநிலை

* பனுவலில் வெவ்வேறு பாத்திரங்கள் ஏற்றுள்ள பாகங்களும் அவற்றின் செயற்பாடுகளும் (எ-டு: கதைத்தலைவன், வில்லன், துணைப் பாத்திரம்)

* பாத்திரங்களை அறிமுகப்படுத்துவதற்கு எழுத்தாளர் கையாளும் உத்திகள்

*கருத்துரை*

* தம் படைப்பின்மூலம் எழுத்தாளர் வெளிப்படுத்தும் எண்ணமும் கருத்துரையும்

* எழுத்தாளரின் பார்வையில் வரலாறு, சமூகம், பண்பாடு தொடர்பான செய்திகள்

* தம் கருத்துகளை வாசகர்களுக்குத் தெரிவிக்க எழுத்தாளர் கையாளும் வழிமுறைகள்

*நடை*

* குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்த எண்ணி எழுத்தாளர் மொழியில் கையாளும் உத்திகளும் வழிமுறைகளும் (எ-டு: சொற்றொடர்கள், வாக்கிய அமைப்பு, தொடரமைப்பு, சந்தம், உவமை, உருவகம் முதலானவை)

*மதிப்பீட்டுக் குறிக்கோள்கள்*

இலக்கியத்தை ஒரு பாடமாகப் பயின்ற மாணவர்கள்:

1 இலக்கியப் பாடப்பகுதிகள் குறித்து முழுமையாக அறிந்திருப்பர்.

2 பாடப்பகுதிகள்பற்றி அடிப்படையான செய்திகள்முதல் நுட்பமான விவரங்கள்வரை தெளிவான புரிந்துணர்வைக் கொண்டிருப்பர்.

3 பாடப்பகுதிகளை ஈடுபாட்டோடு படித்து மகிழ்வதோடு, எழுத்தாளர்களின் செயல்திறனை அடையாளங்கண்டு பாராட்டி மதிப்பிடவும் அறிந்திருப்பர். (எ-டு: கதைப்பின்னல், பாத்திரப் படைப்பு, உத்திமுறைகள், அமைப்பும் சூழலும், நடை, கருத்துரைகள் முதலானவை)

4 பனுவலையொட்டித் தம் தனிப்பட்ட கருத்தையும் மதிப்பீட்டையும் தெளிவான முறையிலும் சான்றுகள் காட்டியும் எடுத்துரைக்க அறிந்திருப்பர்.

6 சமுதாய உணர்வுகள், நம்பிக்கைகள், விழுமங்கள், பழக்க வழக்கங்கள் முதலானவற்றைப்பற்றித் தெளிவான புரிந்துணர்வைப் பெற்றிருப்பர்.